செ.வெ.எண்.748/2020 நாள்: 05.11.2020

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிக்காட்டுதல் மற்றும் சென்னை, தலைமைத் தேர்தல் அலுவலர் அவர்களின் அறிவுரைப்படி கொரோனா நோய் தொற்று காரணத்தினால் பொதுத் தேர்தலின் போது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளின் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சமூக இடைவெளியினைப் பராமரிக்கும் பொருட்டு 1000-க்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடிகளை பிரித்து துணை வாக்குச்சாவடிகள் (Auxiliary Polling Station) உருவாக்குவது குறித்த வாக்காளர் பதிவு அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கருத்துக்கேட்பு கூட்டம் 05.11.2020 அன்று மாலை 03.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மா.வீராசாமி, சார் ஆட்சியர் (பத்மனாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, இ.ஆ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில், தனி வட்டாட்சியர் (தேர்தல்) திரு.சேகர், அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர்கள், திரு.மகேஷ் (தி.மு.க), திரு.பி.லீன்ஸ் (தி.மு.க), திரு.ஓய்.கே.வர்க்கீஸ் (தி.மு.க), திரு.எஸ்.ஜெகதீசன் (பி.ஜே.பி), திரு.இராதாகிருஷ்ணன் (பி.ஜே.பி), திரு.ஆர்.இராதாகிருஷ்ணன் (காங்கிரஸ்), திரு.பி.பால்ராஜ் (காங்கிரஸ்), திரு.K.மோகன் (இந்திய கம்யூனிஸ்ட் (எம்)), திரு.டி.டல்லஸ் (தே.மு.தி.க), திரு.ஆர்.வி.நாராயணன் (தே.மு.தி.க) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.